**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**

முன்னிலை : **திரு. மா. சந்திரமோகன், பி.ஏ, பி.எல்.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி.

திருவள்ளுவர் ஆண்டு 2057 பராபவ வருடம் சித்திரைத் திங்கள் 07ம் நாள்
2026–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20ம் நாள் திங்கட்கிழமை

*******

**<u>அசல் வழக்கு எண். 413/2018</u>**

**<u>CNR.No.TNMY07-000589-2018</u>**

நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தாலுக்கா, சீர்காழி முன்சிபி வானகிரி கிராமம் & அஞ்சல், மெயின்ரோடு, மீனவர் காலணியில் வசித்து வரும் பூவாலி குமாரர், 48 வயதுள்ள சண்முகராஜ்.

**...வாதி**

**...எதிர்...**

1. நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தாலுக்கா, சீர்காழி முன்சிபி வானகிரி கிராமம் & அஞ்சல், கதவு எண் 4/154 மீனவர் காலணியில் வசித்து வரும் வைரகண்ணு குமாரர் இந்து, சுமார் 38 வயதுள்ள ரெங்கநாதன் என்பவரது பவர் ஏஜென்ட் முறையில் காஞ்சிபுரம் மாவட்டம் மற்றும் தாலுக்கா, கீழகட்டளை சக்திநகர், முதலாவது தெரு, பிளாட் நம்பர் 2 என்ற முகவரியில் வசித்துவரும் வைரக்கண்ணு மனைவி, 66 வயதுள்ள பாமா.

2. சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், செம்பனார்கோவில்.

**...பிரதிவாதிகள்**

வாதிக்கு உரிமையுள்ள தாவா பிரிபடாத சொத்தின் பேரில் 1ம் பிரதிவாதியால் 07.08.2018 தேதியில் மோசடியாகப் பெறப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணம் (D.No.1477/2018 of Sembanarkovil Sub Registrar Office) செல்லா நிலையது என விளம்புகை செய்து உத்தரவிடக் கோரியும், தாவா பிரிபடாத சொத்தினை பொருத்து, முழுவதுமாகவோ, தனித்தனியாகவோ, 1ம் பிரதிவாதியோ, அவரது ஆட்களோ அல்லது அவரது முகவரோ எந்த காலத்திலும், அவரது உறவினர்களுக்கோ, அல்லது மற்ற வெளிநபர்களுக்கோ எந்த காலத்திலும் விற்கிரய நடவடிக்கைகளில் (Not to Alienate) ஈடுபடாவண்ணம் அதனை உடனடியாக தடுத்து நிறுத்தும் வண்ணம் ஒரு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி உத்தரவிடக் கோரியும், செலவுத்தொகை கோரியும், இவ்வழக்கு வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| இவ்வழக்கு தாக்கலான நாள் | 01.12.2018, 10.12.2018, 18.12.2018 |
| இவ்வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் | 18.12.2018 |

| | |
|---|---|
| இவ்வழக்கின் வழக்கு மூலம் ஏற்பட்ட நாட்கள் மற்றும் இடம் | 22.11.1967, 30.10.2018, 07.08.2018 ஆகிய தேதிகளில் வழக்கு மூலம் எழுந்துள்ளது. |
| இவ்வழக்கின் பொருமானம் மற்றும் செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம் | வாதிக்கு உரிமையுள்ள தாவா பிரிபடாத சொத்தின் பேரில் 1ம் பிரதிவாதியால் 07.08.2018 தேதியில் மோசடியாகப் பெறப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணம் (D.No.1477/2018 of Sembanarkovil Sub Registrar Office) செல்லா நிலையது என விளம்புகை பரிகாரம் பெற ரூ.5000/- என நிர்ணயிக்கப்பட்டு, அதற்கு நீதிமன்ற கட்டணமாக ரூ.150/-ம், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் பெற ரூ.1000/- என நிர்ணயிக்கப்பட்டு, அதற்கு நீதிமன்ற கட்டணமாக ரூ.30/-ம், ஆக கூடுதல் 6000/-க்கு நீதிமன்ற கட்டணமாக ரூ.180/-, நீ.ம.க.ச. பிரிவு 25 (d) & 27 (C) ன் படி செலுத்தப்பட்டுள்ளது. |

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 18.04.2026 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. A. தியாகராஜன் அவர்கள் ஆஜராகியும், 1ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. R. கார்திக்ராஜன் அவர்கள் ஆஜராகியும், 2ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் திரு. S. முத்துக்குமார் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை, ஆவணங்கள், சாட்சியங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

**<u>தீர்ப்பாணை</u>**

1. இவ்வழக்கானது தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.
2. தரப்பினர்களின் உறவுமுறையை கருத்தில் கொண்டு செலவுத்தொகை இல்லை. .

**<u>சொத்து விபரம்</u>**

நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை பதிவு மாவட்டம், செம்பனார்கோவில் சார் பதிவாளர் அலுவலகத்தை சேர்ந்த சீர்காழி தாலுக்கா, வாணகிரி கிராமம், மீனவர் தெரு,

1. சர்வே எண். 403/6A-ல் (பழைய சர்வே எண்.403/6 பா) நத்தம் மனை 700 சதுர மீட்டர் பூரா.

2. சர்வே எண். 403/6B-ல் (பழைய சர்வே எண்.403/6 பா) நத்தம் மனை 700 சதுர மீட்டர் பூரா.

ஆக கூடுதல் 1400 சதுர மீட்டர் மனையும், மேற்படி மனையில் 1200 சதுரடியில் கட்டப்பட்டுள்ள ஆர்.சி.சி வீடு. மேற்படி வீட்டில் பொருத்தப்பட்டுள்ள மின் இணைப்பு வகையறா, ½ HP மின் மோட்டார், தென்னை மரங்கள் – 50, மற்றும் இதர இனங்கள் உட்படவும். மேற்படி வீடு செங்கல், நாட்டுமரம், சிமெண்ட் கொண்டு 22 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டது ஆகும். மேற்படி கதவு எண். 4/154, மின் இணைப்பு . 06–55–100–644.

<u>**நான்கெல்லை விபரம்**</u>

ஜெயராமன் மாடி வீட்டுக்கு கிழக்கு, வாணகிரி தெரு சாலைக்கு மேற்கு, ஊராட்சி ஒன்றிய பள்ளிக்கு தெற்கு, எல்லையம்மன் கோவிலுக்கு வடக்கு இதற்குட்பட்டது. மேற்படி இரண்டு சர்வே எண்களுக்கு ஒரே நான்கெல்லை.

**வாதி, பிரதிவாதிகள் தரப்பில் செலவுத்தொகை பட்டியல் விபரம் தாக்கல் செய்யப்படவில்லை.**

2026–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20–ம் நாள் என் கையொப்பம் இந்நீதிமன்ற முத்திரையுடன் இடப்பட்டது.

(ஒம்/– மா. சந்திரமோகன்)
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சீர்காழி.**

**<u>தீர்ப்பாணை</u>**
அசல் வழக்கு எண்.413/2018
நாள்.20.04.2026.